செ.வெ.எண் : 220 தேதி : 17.05.2017

## பத்திரிக்கை செய்தி

## வதந்திகளை நம்ப வேண்டாம்

## புழக்கத்தில் உள்ள 10 ரூபாய் நாணயங்கள் செல்லும்

## காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் அறிவிப்பு

மத்திய அரசால் தயாரிக்கப்பட்ட நாணயங்களை ரிசர்வ் வங்கி புழக்கத்தில் விடுகிறது. ரூபாய் நோட்டுகளை விட நாணயங்கள் நீண்ட காலத்திற்கு புழக்கத்தில் இருக்கும். ஆகவே ஒரே மதிப்பில் வெவ்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளில் நாணயங்கள் புழக்கத்தில் இருந்து வருகிறது. அந்த வகையில் புழக்கத்தில் உள்ள 10 ரூபாய் நாணயங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டன. கடந்த 2010-ம் ஆண்டு ஜூலை 15-ந் தேதி புதிதாக ரூபாய் சின்னம் அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து 10 ரூபாய் நாணயங்களும் புதிய குறியீட்டுடன் தயாரிக்கப்பட்டன. ஏற்கனவே புழக்கத்தில் உள்ள 10 ரூபாய் நாணயங்களில் இருந்து அவை சற்றே மாறுபட்டுத் தோன்றினாலும் இரண்டுமே சட்டப்படி செல்லுபடியாகும். மேலும் அனைத்து விதமான பரிவர்த்தனைகளுக்கும் ஏற்றவை.

எனவே பொதுமக்கள் 10 ரூபாய் நாணயங்கள் செல்லாது என்று பரவி வரும் வதந்திகளை புறக்கணித்து 10 ரூபாய் நாணயங்களை தொடர்ந்து பயன்படுத்தலாம். குறிப்பாக அரசு போக்குவரத்து கழகம், மின்சார வாரியம், நியாய விலைக் கடைகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் போன்றவை பொது மக்கள் அளிக்கும் 10 ரூபாய் நாணயங்களை அனைத்துப் பரிவர்த்தனைகளுக்கும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவை சட்டப்படி செல்லுபடியாகும் என்பதால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்கள், ஓட்டல்கள், திரையங்குகள், கல்வி நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள் 10 ரூபாய் நாணயங்களைப் பணப் பரிவர்த்தனைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

15/5/17

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.